**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 03.03.2026**

**OS. No. 36/2016**

**வழக்கு சாட்சி DW.3– நாட்ராயன் , த/பெ. சுப்பிரமணி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்கச்சொல்லி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை ஏதேனும் எனக்கு வரப்பெற்றதா என்றால் இல்லை . மோகினி கேட்டுக்கொண்டதன்பேரில் நான் இந்த வழக்கில் சாட்சியாக தோன்றியுள்ளேன் என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். நிரூபண வாக்குமூலமானது வக்கீல் மூலம் தயார் செய்யப்பட்டது. மோகினியும், வேலுச்சாமியும் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை தொடர்புடைய சரத்து விபரங்கள் எனக்குத் தெரியும் என்றால் தெரியும் . அந்த உடன்படிக்கை சர்வே எண்.424/14 தொடர்பாக எழுதப்பட்டது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள அனுபவத்தை ஒப்படைத்ததாக சொல்லப்பட்டுள்ள சங்கதி உண்மையல்ல என்றால் சரியல்ல . அந்த உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள இடம் தற்போது காலியிடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான்.

தற்போது காலியாக உள்ள இடம் வேலுச்சாமியின் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல , மோகினி, பிரகாஷ் வசம்தான் உள்ளது . அபுதாகீர் என்பவருக்கு தாவா சொத்தில் எந்தவொரு உடைமையோ , உரிமையோ இல்லாத நிலையில் அவர் மோகினிக்கு சொத்தை மாற்றாக்கம் செய்ததாக சொல்வது சட்டத்தின்பால் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மோகினியும், வேலுச்சாமியும் ஏற்படுத்திக்கொண்ட கிரைய உடன்படிக்கையின்படி கிரையத் தொகையை கொடுத்து

கிரையமானது முடிக்கப்பட்டதா என்றால் மோகினி , வேலுச்சாமிக்கு ரூ.7,80,000/- கொடுத்துவிட்டார், ஆனால் பழனி சார்பு நீதிமன்றத்தில் நடந்த வழக்கு முடிந்த பிறகு வேலுச்சாமி கிரையம் முடித்துக்கொடுப்பதாக சொல்லிவந்து , அந்த வழக்கு முடிந்தபின்னும் தற்போதுவரை கிரையம் முடித்துக்கொடுக்கவில்லை. 18.07.2013 ஆவணமான பி.வா.சா.ஆ.13 ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.13 ஆவணம்தான் நான் கையொப்பம் செய்த ஆவணம் என்றால் சரியல்ல, நான் கையொப்பம் செய்த ஆவணம் வேறு ஆவணம் ஆகும் . என்னிடம் காட்டப்படும் பி .வா.சா.ஆ.13 ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது . நான், மோகினியிடம் பணம் பெற்றுக் கொண்டு வழக்கு விபரங்களுக்கு எதிராகவும் , வேலுச்சாமிக்கு எதிராகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.04 18:20:49 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.